தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 13, பவ, திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, மார்ச் 27, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"

நீதியையும் நன்மையையும் விரும்பி பிறர்க்குப் பயன் உடையவர்களாக விளங்குபவரின் உயர்ந்த பண்பை மக்கள் அனைவரும் பாராட்டிப் போற்றுவர்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 101, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு நிதியமைச்சர்.

101—

தாமாகவே பதவி விலகும் பணியாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் திட்டம்

***40688—**திருமதி கே. மரியம் உல் ஆசியா :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் பணியிலிருந்து தாமாகவே பதவி விலகும் பணியாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தாமாகவே பதவி விலகும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் சில நிபந்தனைகளுடைய அடிப்படையில் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு வழங்கும் சலுகைகள் விஷயத்தில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முன்னணியில் இருக்கிறது. அரசுப் பணிகளிலிருந்து தாமாகவே பதவி விலகும் பணியாளர்களுக்கும் ஓய்வு ஊதியம் வழங்க இருப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலான தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒரே வகை பதவி வகித்தவர்களிடையே தற்சமயம் ஓய்வு ஊதியம் வழங்குவதில் வேறுபாடு இருப்பதால் இதில் சமத்துவமான நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமாகவே பதவி விலகுபவர்களுக்கு சில நிபந்தனைகளுடைய அடிப்படையில் ஓய்வு ஊதியம் கொடுக்கப்படலாமா என்பது பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னேனே தவிர அது கொடுக்கப்படலாம் என்று இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. ஆனால் அரசுப் பணியாளர் ஒருவர் குறைந்தது 10 ஆண்டுக் காலம் தகுதிப் பணி புரிந்தால் அவர் ஓய்வு பெறத் தகுதி உடையவர் ஆவார். ஓய்வு பெறும் நாளுக்கு முன்னர் கடைசி 10 மாத கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50% என்ற ஒரே சீரான விகிதத்தில்தான் ஓய்வு ஊதியம் கிடைக்கப் பெறுகிறது. உயர் அளவாக 33 ஆண்டுகள் தகுதிப் பணி புரிந்தவர்களுக்கு முழு ஓய்வு ஊதியம் அளிக்கப்படுகிறது. 33 ஆண்டுகளுக்கு குறைவான தகுதிப் பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வு ஊதியம் குறைக்கப்படும். அரசு ஊழியர்கள் தாமாகவே பதவி விலகும் திட்டப்படி அவர்கள் 20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் பணியாற்றியிருந்தால் மேற்கொண்டு 5 ஆண்டுகள் சேர்த்து ஓய்வு ஊதியத்திற்கு கணக்கிடப்படுகிறது. ஒருவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டு பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டால் மருத்துவச் சான்றிதழ் பெற்று அவருக்கு ஓய்வு ஊதியம் வழங்கப்படுகிறது. குறைந்த அளவு ஓய்வு ஊதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 375 ஆகும். உயர் அளவு ஓய்வு ஊதியத்திற்கு உச்சவரம்பு இல்லை. ஓய்வு ஊதிய நன்மைகளைப் பொறுத்தவரை மத்திய அரசு அதன் பணியாளர்களுக்கு பின்பற்றி வரும் அதே நடைமுறைகளைத்தான் மாநில அரசு பின்பற்றுகிறது. மத்திய அரசு பின்பற்றும் நடைமுறைக்கு ஏற்ப அதாவது ஆண்டில் ஒரு முறை ஜனவரி

1, ஜூலை 1 ஆகிய தேதிகளில் அகவிலைப்படி வழங்கப்படுகிறது. பணிபுரியும் பணியாளர்கள் பெறுவதுபோல் ஓய்வு ஊதியம் பெறுபவர்களும், குடும்ப ஓய்வு ஊதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி தவணைத் தொகை பெறுகிறார்கள். அரசுப் பணியிலிருந்து தாமாகவே பதவி விலகும் அரசு ஊழியர்களுக்கு ஓய்வு ஊதியம் இப்போது இருக்கின்ற சட்டப்படி வழங்கப்படுவது இல்லை. ஏனெனில் ஓய்வு ஊதிய விதி 23 (1)-ன்படி தாமாகவே பதவி விலகியவர்கள் முந்தைய பணியை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள். எனினும் சில இன்றியமையாத முக்கிய காரணங்களையொட்டித் தாமாகவே பதவி விலகுகிறவர்களுக்கு ஓய்வு ஊதியம் சில நிபந்தனைகள் அடிப்படையில் கொடுக்கலாமா என்பது பற்றி நிதித் துறையினுடைய பரிசீலனையில் அந்தக் கருத்துரு இருந்து வருகிறது. முடிவு எடுத்ததற்குப் பிறகு அறிவிக்கப்படும்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுடைய குறைகள் முறையீடுகளை கவனிக்க நிதி அமைச்சகத்தின் கீழ் தனித் துறை அல்லது இவர்களின் பிரச்சினைகளை கவனிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்படுமா என்பதையும், அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் சேவைகளைப் பயன்படுத்திக்கொள்ள அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு ஊதியங்கள் வழங்குவதற்கான தன்மையைக் கவனிப்பதற்கு ஒரு தனிப் பிரிவே நிதித் துறையில் இருந்து வருகிறது. ஆனால் பல பேருக்கு ஓய்வு ஊதியம் முறைப்படி அவ்வப்போது கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் சில பலருடைய ஓய்வு ஊதியங்கள் கிடைக்கப்பெறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்ன அடிப்படைக் குறிப்புகள் அவர்கள் தரவேண்டுமோ அந்தக் குறிப்புகளை முழுமையாக அவர்கள் தருவதில்லை. அதற்கு விளக்கங்கள் கேட்கும்போது அவர்கள் முழுமையாகத் தந்து விடுவார்களானால், இந்த ஓய்வு ஊதியத்தினுடைய சட்டப்படியான நிபந்தனைகளை அவர்கள் நிறைவேற்றி வைப்பார்களேயானால் அவர்களுக்கு உடனடியாக ஓய்வு ஊதியம் வழங்குவதற்கு இயலும். அந்த வகையிலே ஒத்துழைப்பு நல்குவதற்கு அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆபீசும் ஒத்துழைப்பு தந்து வருகிறது; அவர்களுக்கும் சொல்லியிருக்கிறோம். ஆக எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் கொடுக்கவேண்டுமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவில் கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய எண்ணமும் கொள்கையும் ஆகும். ஆனால் சிலபல விவரங்கள் வராததன் காரணமாக சிலபல வழக்குகளிலே ஓய்வூதியம் குறித்த நேரத்தில் கிடைக்கப்பெறாமல் இருந்து வருகின்றது.

முற்பகல் 10.05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியில் இருப்பவர்கள் மாரடைப்பு, புற்றுநோய் போன்ற நோய்களால் 2 ஆண்டு காலம், 4 ஆண்டு காலம் முன்னதாகப் பணிக்காலத்தில் இறக்க நேரிட்டால் அப்படி இறந்த அவர்களுடைய குடும்பங்களுக்கு ஓய்வூதியம் கருணை அடிப்படையில் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ? அப்படி வழங்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே அவர்கள் இறந்து விடுவார்களானால் அவர்களுக்கு சிறப்பு நிதி அளிக்கின்ற அத்தகைய ஏற்பாடுகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் அவர்களை நம்பி வாழ்கின்ற குடும்பங்களுக்கு ஓய்வூதியம் வழங்குகின்ற திட்டம் இருந்து வருகிறது. மத்திய அரசில் என்ன என்ன நடைமுறைக் கொள்கைகள் பின்பற்றப்பட்டு வருகிறதோ அதே நடைமுறைக் கொள்கைகளை மாநில அரசு முழுக்க, முழுக்கப் பின்பற்றி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவர்கள் தாமாகவே பதவி விலகும் பணியாளர்கள் என்று கேட்டிருப்பது வாலண்டரி ரிடையர்மெண்டு என்று நினைக்கிறேன். இப்போது வாலண்டரி ரிடையர்மெண்டு வாங்குபவர்களுக்கு 20 ஆண்டுகள் குவாலிபையிங் சர்வீஸ் இருந்தால் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று இருக்கிறது. அதை 15 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டுமென்று பல கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. அந்த மாதிரி 15 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கின்ற திட்டம் ஏதேனும் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொல்லியபடி மத்திய அரசு இந்த ஓய்வூதியம் வழங்குவதைப் பொறுத்து என்ன என்ன நடைமுறைக் கொள்கைகளை பின்பற்றி வருகிறதோ அவற்றைத் தான் மாநில அரசு பின்பற்றி வருகிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில் 20 ஆண்டுகளாகக் குறைத்து ஏற்படுத்தும் எண்ணம் இப்போது இல்லை. எனவே, மாநில அரசிடத்தில் அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

1995 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலண்டரி ரிடையர்மெண்டு வாங்குபவர்களுக்கு முக்கியமாக ஏதாவது காரணங்கள் காட்டி வாங்கவேண்டுமா அல்லது 20 வருடங்கள் முடிந்துவிட்டால் வாங்கலாமா என அறிய விரும்புகிறேன். ஏன் என்றால், சாதாரணமாக அரசுப் பணியில் இருப்பவர்கள் மேலை நாடுகளில் எங்காவது நல்ல பெரிய வேலை வந்துவிட்டால் இதை ஒரு காரணமாகக் காட்டி சென்று விடுவார்கள். அது நம்முடைய அரசுக்கு நஷ்டம். ஆகவேதான் நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டுகள் முடிந்த பிறகு தாங்கள் 20 ஆண்டு காலம் அரசுப் பணியில் இருந்துவிட்டோம் என்பதற்கு சான்று கொடுக்கின்ற வகையில் அவர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமையுடையவர்களாவார்கள். அந்த 20 ஆண்டுகளுக்குப் பிறகு தாமாக முன்வந்து பதவி விலகும்படி நேரிட்டால் 5 ஆண்டுகள் கூட்டிக் கணக்கிட்டு அதற்கு ஏற்றபடி தருகிறோம். முழு ஓய்வூதியம் பெறவேண்டும் என்றால் 33 ஆண்டுகள் அவர்கள் பணியாற்றியிருக்க வேண்டும். ஆக இப்போது இருக்கிற விதிப்படி 20 ஆண்டுகள் கழிந்த பிறகுதான் அவர்கள் தாமாக விலகுவதற்கு உரிமையிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய பொது நிறுவனம் மற்றும் மத்திய அரசின் பல துறைகளில், கோல்டன் ஹேண்டு ஷேக் ஸ்கீம்-தங்க கைக் குலுக்கல் திட்டம் என்ற ஒரு திட்டம் இருப்பதாக அறிகிறேன். அதாவது தாமாக விலக முன்வருகிறவர்களுக்கு பல்வேறு சலுகைகள் அளித்து இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையில் அரசினுடைய திட்டம் இருப்பதைப் போல் நம்முடைய தமிழகத்தில் நடைமுறைப்படுத்த முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசின் சார்பாக நடைபெறுகின்ற திட்டமாக இல்லை, அப்படிப்பட்ட திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. அரசு, இருக்கிற நிலைமைகள், விதிமுறைகளை எல்லாம் கையாண்டு ஓய்வூதியம் வழங்கும் அளவுக்குத்தான் இருக்கிறதே தவிர வேறுவிதமாக பரிசுத் திட்டங்கள் போன்றவைகள் இல்லை.